---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம்ம 1 இன் 132(அ) பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது | இது தொடர்பில் நடைமுறையொன்ற காணப்படவில்லை என்பதும், 2021ஆம் ஆண்டுக்காக புதிய | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம்ம 1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 108 பந்தியின் பிரகாரம் மொத்த வருமான செலவினத்தின் உப வகைப்படுத்தலொன்று குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான வகையில் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளய்வாண்டின் பதிவுக் கட்டமாக கிடைத்திருந்த ரூபா 23,046,000 ஆன வருமானத்தினை வகைப்படுத்தி முன்வைத்திருக்கவில்லை. | கணக்கீட்டு முறைமையொன்றினை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளதாக. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம்ம 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அந்த சொத்துக்களின் நியாயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | -மேற்படி- | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம்ம 7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேரவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் 10 ஊழியர்களுக்காக மிகையூதியம் செலுத்துவதற்காக ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டு வரையிலும் இதற்காக பொருத்தமான நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக. | மிகையூதிய கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வங்கிக்கு நேரடியாக கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்காக நடைமுறையொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிராமையால், மீளாய்வாண்டினுள் 805 சந்தர்ப்பங்களில் நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா | இது தொடர்பில் நிகழ்ந்துள்ள வழு தொடர்பில் கலந்துரையாடி எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும் என்பது. | வங்கிக்கு நேரடியாக கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

8,489,500 கூட்டுத்தொகையை இனங்கண்டு கணக்கு வைப்பதற்க நடவடிற்கை எடுக்காது தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளின் போது வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 1,086,000 தொகை இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின் போது நேரடியான வைப்பு வருமானங்களாக ஏனைய வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3,844,044 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(iii) விரிவான பட்டோலைகள் | எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும் என்பது. | |
| (ஆ) | செலுத்த வேண்டியவைகள் | 28,582,539 | (i) காலப் பகுப்பாய்வு<br>(ii) மீதி சான்றுபடுத்தல்கள் | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிதியங்களின் மாற்றல்கள் (Fund Transfer Account) | 232,400 | பட்டோலைகள் | - மேற்படி - | - மேற்படி - |

### 1.5.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பேரவையினால் அறவிடப்படுமம் பதிவுக் கட்டண வருமானத்தில் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டிய 50 சதவீத தொகையில் ரூபா 28,306,439 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவுக் கட்டண வருமானத்தில் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டிய 50 சதவீதம் தொடர்பில் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | இது தொடர்பில் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது, பேரவையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 41,904,716 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பில் எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும் என்பது. | நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 135, 136 மற்றும் 262(2) | பேரவையினால் நிதி அதிகாரங்களை கையளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் காரணத்தால் அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 431(3) | ரூபா 2,165,818 மொத்த கிரயமுடைய முதலீடுகளின் விலைகூறப்பட்ட பெறுமதி, கொள்வனவு பெறுமதி, விற்பனையில் இருந்தான வருமானம், இலாபம் அல்லது நட்ட பெறுபேறுகள், பங்கிலாபம், பங்குலாபம் கிடைத்த திகதி முதலியனவற்றை உள்ளடக்குகின்ற ஒரு முதலீட்டு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும் என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒரு முதலீட்டு பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் | விழா முற்பணங்கள் மற:றும் வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தவிர | ஊழியர்களின் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு 10 | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.8, 3.14 மற்றும் 10.4 ஆம் பிரிவு | ஏனைய அனைத்து கடன் தொகைக்காகவும் 4.2 சதவீத வட்டி மாதந்தோறும் அறவிடப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் கடந்த வருடங்களில் மற்றும் மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,745,666 ஆன கடன் தொகைக்கான வட்டி அறவிடப்பட்ருக்கவில்லை. மேலும், கடன் வழங்குவதற்கு முன்னர் பொது 272 படிவத்தினை பயன்படுத்தி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில் லை. அவ்வாறே, உரிய சேவைக் காலமொன்று இல்லாத பிணையாளர்களை பிணை வைத்து ரூபா 2,771,666 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. | மாத அடிப்படை சம்பளத்திற்கு சமனான கடன் தொகையை வழங்குவதற்கு பேரவையினால் தீர்மானிக்கப்பட்டு அந்த தீர்மானம் முகாமைத்துவக் குழுவில் மற்றும் மாதாந்த தலைமைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா க மற்றும் வட்டி அறவிட எதிர்பார்ப்பதாக. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 10 ஆம் திருத்திய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,120,031 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டளவில் புதிய நடைமுறையொன்றினை பின்பற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேடு ஒன்று தயாரிக்கப்படுவதுடன், அது நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (உ) | 2006 யூன் 06 ஆந் திகதிய 10/2006 மற்றும் 2007 நவம்பர் 01 ஆந் திகதிய 24/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 10/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை, 24/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்தாது உத்தியோகத்தர்களின் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 211,550 மற்றும் 2020ஆம் ஆண்டின் போது ரூபா 210,262 செலுத்தப்பட்டிருந்தது. | பேரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவா று வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளமையால் அவர்களை ஊக்குவிப்பதற்கு மற்றும் வருகையினை அதிகரிப்பதற்கு சேகரிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டது என்பது. | - மேற்படி - |
| (ஊ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133 (1) ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய உச்ச இடர் கடன் தொகை ரூபா 250,000 | ஊழியர்களின் வேண்டுகொள்களை கருத்திற்கொண்டு 10 மாத அடிப்படைச் சம்பளத்திற்கு சமனான | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 2008 திசெம்பர் 31ஆந் திகதிய 30/2008ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | இற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது 09 உத்தியோகத்தர்களுக்கு குறித்த எல்லையை விஞ்சி ரூபா 1,756,666 இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. | கடன் தொகையை வழங்க பேரவையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, அந்த தீர்மானத்தினை முகாமைத்துவக் குழுவில் மற்றும் மாதாந்த பொதுக் கூட்டத்தில் அங்கீகரித்துள்ளமை மற்றும் வட்டி அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளமை. | செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய PED/03/2018 மற்றும் 2019 திசெம்பர் 09ஆந் திகதிய PED/03/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக வெகுமதி கொடுப்பனவுகளை செலுத்தும் இயலுமை காணப்படாத போதிலும், அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் இந்த இரண்டு வருடங்களுக்காக ரூபா 445,500 ஆக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக எவ்வித முறையான அங்கீகாரமும் இல்லாது விழா முற்பண படிகளாக ரூபா 292,200 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது ஊழியர்களுக்காக வழங்கப்படும் படிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், செயலாற்றல் மிகவும் உயரிய மட்டத்தில் காணப்படுகின்றமையால் விழா ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பேரவை தீர்மானத்திருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 3.28 மில்லியன் பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6.17 மில்லியனாக ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2.89 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செலவினங்கள் ரூபா 3.78 மில்லியனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்யும் அதிகாரச்சட்டத்தின் 2(1) உப பிரிவின் பிரகாரம், அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு செய்ய வேண்டும். கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 9 மாகாணங்களின் 3,515 மருத்துவ நிறுவனங்கள் நிறுவப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ஒழுங்குபடுத்தல் பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 1,888 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம், பதிவு செய்ய வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கையை இனங்காணுவதற்கு, பதிவு செய்வதற்கு மற்றும் பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று ஒழுங்குபடுத்தல் பேரவையினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கவனத்திற் கொள்ளக்கூடிய எண்ணிக்கையான நிறுவனங்கள் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது பதிவு செய்துள்ளமை மற்றும் பின்னர் பதிவுகளில் கிரமமான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் பதிவு செய்தலின் துரித அதிகரிப்பொன்று காணக்கூடியதாக இருந்ததமை, முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பீடொன்று மாகாண சுகாதார உத்தியோகத்தர்களின் ஆலோசனையுடன் மற்றும் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் அந்தந்த மாகாணங்களின் சுகாராத சேவைகள் பணிப்பாளர் அல்லது தகைமைவாய்ந்த உத்தியோகத்தர் குழாமொன்றினால் பொருத்தமான நியம மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கு மற்றும் பதிவினை ஆண்டுதோறும் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் பிரகாரம், பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்திசெய்வதற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்கு, தற்போது பேணப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறையொன்றினை அமுல்படுத்துவதற்கு, ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையை சான்றுபடுத்துவதற்கு மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது ஆகக் குறைந்த நியமங்கள் பின்பற்றப்படுவது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவதற்கு மற்றும் வழங்கப்படும் நோயாளிகளை பேணுவதற்கு சேவைகளின் தரம் தொடர்பில் சான்றுபடுத்துவதற்கு பொருத்தமான நடைமுறையொன்றினை தயாரித்து அமுல்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. | அந்தந்த மாகாணங்களின் சுகாராத சேவைகள் பணிப்பாளர் அல்லது தகைமைவாய்ந்த உத்தியோகத்தர் குழாமொன்றினால் பொருத்தமான நியம மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கு மற்றும் பதிவினை ஆண்டுதோறும் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை மற்றும் வருடாந்தம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக, பேரவையினால் பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் பொருத்தமான தரம் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பதிவிற்கான அங்கீகாரம் வழங்கப்படுகின்றமை, அனைத்து தனியார் மருத்துவ நிறுவனமும் உள்ளடங்கும் வகையில் அதில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களினதும் சேவைத்திறன் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீடொன்று மூன்றாம் மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவுடன் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை துரிதமாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக. | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் பிரகாரம்,ப பணிகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளமையால் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய வழிகாட்டல்களை பிரமாணங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம், பேரவையின் அறிவுரையின் | ஒழுங்குபடுத்தல் பேரவையை தாபித்தமைக்கான நோக்கங்களை | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக சான்றுபடுத்தல் உத்தேச முறைமையொன்றினை |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் வரித்தமானியில் வெளியிடப்படும் விதியொன்றின் ஊடாக அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக சான்றுபடுத்தல் உத்தேச முறைமையொன்று கிரமமாக குறிப்பிடப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடைந்துபொள்வதற்காக பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக, தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கு உரிய வழிகாட்டில்களை தயாரித்து ஆகக் குறைந்த தகைமைகள் மற்றும் நியமங்கள் உள்ளடங்களாக அவை பிரமாணங்களாக மாற்றுவதற்காக சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவின் ஊடாக சட்ட வரைபுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஈ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 18(2) உப பிரிவின் (எ) பந்தியின் பிரகாரம், தொடர்புடைய அல்லது அதிருப்தியடைந்த நபரொருவரினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனமொன்றிற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபரொருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் முறைப்பாடொன்றினை கையேற்கும் போது மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியான அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக மக்களின் பிரச்சினைகளை முன்வைக்க முடியும் என்பதுடன், அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான வழிகாட்டியொன்று தயாரிக்கப்படுகின்றமை. | முறைப்பாடொன்றை பெற்றுக்கொள்ளும் போது மற்றும் மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியான அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒழுங்குபடுத்தல் பேரவையினால் சேகரிக்கப்படும் பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதத்தை மாகாண சபைகளின் செயலாளர்களுக்கு வழங்குவதற்கு முன்னர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தனியார் துறை அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்றுடன் வருடாந்த முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கும் ஆண்டின் இறுதியில் செலவினம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும், 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவினை திருத்தம் செய்வதற்கும் 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 04 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்படாமல் இருந்தது . | 2011ஆம் ஆண்டு வரையிலும், தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கான கட்டணங்களில் 50 சதவீதம் உரிய மாகாண சபைகளுக்கு செலுத்தப்பட்டுள்ளமை, மாகாண சபைகளுக்கு தனியான கணக்கொன்று உள்ள போது மாத்திரம் ஆண்டின் ஆரம்பத்தில் வருடாந்த திட்டமொன்றினை சமர்ப்பித்த பின்னர் மாத்திரம் பணம் செலுத்தப்பட வேண்டும் என்பது 2011 பெப்ரவரி 11ஆந் திகதிய சுகாதார அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது என்பது மற்றும் கிடைக்கும் பணத்தை செலவிடுதல் தொடர்பில் செயன்முன்னேற்ற அறிக்கையொன்று உரிய முறையில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது மற்றும் இந்த தீர்மானம் 2011 மார்ச் 11ஆந் திகதி தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் மாதாந்த கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை. | 2015 யூலை 09 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2006 இல், 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவினை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படும் வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் அந்தந்த மாகாண சபைகளுக்க அனுப்பப்பட | - மேற்படி - | ஒழுங்குபடுத்தல் பேரவையால் மாகாணசபைகளுக்கு செலுத்தவேண்டிய பதிவுக்கட்டண வருமானத்தில் 50 சதவீதம் மாகாணசபை |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். எனினும் ஒழுங்குபடுத்தல் பேரவையினால் பதிவு கட்டண வருமானத்தில் 50 சதவீதம் மாகாண சபை நிதியத்திற்கு செலவ வைக்கும் நோக்கில் மாகாணசபையின் செயலாளர்களுக்கு அனுப்பப்படாது அதற்க பதிலாக மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டினுள் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டினுள் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 8,193,874 தொகை ஒவ்வொரு மாகாண சபை நிதியங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறு அனுப்பப்படாத தொகை ரூபா 28,306,439 ஆகும். | | நிதியத்திறகு செலவு வைக்க வேண்டும். அதற்காக மாகாண சபையின் ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துதல் நிறுத்தப்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபைகளில் செலவினங்களை மேற்கொள்வதற்கு எந்தவொரு ஏற்பாடும் அதிகாரச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றும் ஊழியர்களின் தொலைபேசி படிகள், போக்குவரத்துச் செலவினம் மற்றும் சம்பளங்களாக கடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் ரூபா 2,950,795 ஒழுங்குபடுத்தல் பேரவையால் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி அதிகாரச்சட்டத்தின் 3(5) பிரிவின் பிரகாரம், | மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள மருத்துவரினால் மாகாணத்திலுள்ள அனைத்து மருத்துவ நிறுவனங்களையும் பரிசோதிப்பதற்காக, முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு, பார்வையிடுவதற்கு, உரிய தரத்தில் மற்றும் பொருத்தமான நடைமுறைகளுக்கு முரணான நிறுவனங்கள் தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அறிவிப்பதற்கு மற்றும் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மேல் மாகாண சபைக்கு செலுத்தவேண்டிய பதிவுக்கட்ட வருமானத்தில் அந்த தெபகை கழிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை மயால், அவரது சம்பளம் மாகாண சபைக்கு செலுத்த வேண்டிய 50 சதவீத பணத்திலிருந்து செலுத்தபடுகின்றமை. | |
| (ஈ) | தனியார் மருத்துவ நிறுவனங்களில் உள்ள ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மேற்படி அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்திருக்காத போதிலும், தனியார் மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியருக்காக Referesher Gap Filling Course எனும் பெயரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2014 மே 30ஆந் திகதி தனியார் ஆரோக்கியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் சங்கம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து 5 வருட காலப்பகுதிக்காக புரிந்துணர்வ உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. அந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,424,698 தொகை ஒழுங்குபடுத்தல் பேரவையால் செலவு செய்யப்பட்டிருந்தது. | தனியார் மருத்துவ நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் தகைமைகள் (விசேடமான மருத்துவ பதவியணியினரின்) பேரவையினால் கண்காணிக்கப்படுகின்றமை, சபையினால் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து தாதியர் பயிற்சி பாடசெறிகள், பற் சிகிச்சை பயிற்சி பாடநெறிகள் உரிய முறையில் நடைமுறைப்படுததப்படுகின்றமை, இந்த பணிகளை உரிய முறையில் தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் தனியார் நியுவனங்களால் மேற்கொள்ளப்படும் சேவைகளின் தரம் சான்றுபடுத்தப்படுகின்றமை . | அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்துள்ள பணிகளுக்காக மாத்திரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டினுள் 09 கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன், 28 பேரைக் கொண்ட கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்களின் சராசரி | மீளாய்வாண்டினுள் பேரவையில் அங்கத்தவர்களின் வருகை தொடர்பில் தரவு அறிக்கையொன்று எல்லா வருடத்திலும் விடயத்திறக | கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்களுக்காக அததன் அங்கத்தவர்களின் வருகையை அதிகரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்குபற்றல் 58 சதவீதம் மாத்திரம் ஆகும். சட்டப் பிரிவினை பிரதிநிதித்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த அங்கத்தவர், அந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றியிராததுடன், முகாமைத்துவ பிரதிநிதி ஒரு கூட்டத்தில் மாத்திரம் பங்குபற்றியிருந்தார். மேலும் இர அங்கத்தவர்கள் 02 தடவைகள் படி பங்குபற்றியிருந்ததுடன், தலைவர் 3 கூட்டத் தடவைகளில் மாத்திரம் பங்குபற்றியிருந்தார். | பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பப்படுகின்றமை. | |
| (ஊ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 6(1)ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டுச் சபைக்கு மேலதிகமாக, 10 அங்கத்தவர்களை கொண்ட அலுவலக முகாமைத்துவ குழுவொன்ற நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அந்தக் குழுவின் 10 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட்டிருந்தன. அவற்றுள் 5 கூட்டங்களுக்காக மூன்று பேர் வீதம் பங்குபற்றியிருந்ததுடன், எஞ்சிய 5 கூட்டங்களுக்காக 4 அங்கத்தவர்கள் வீதம் பங்குபற்றியிருந்தனர். மேலும், இந்த கூட்டங்களுக்காக பங்குபற்றிய அங்கத்தவர்களுக்கு முறையான அங்கீகாரமின்றி உரு கூட்டத்தடவைக்காக ரூபா 5,000 படியான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒழுங்குபடுத்தல் பேரவையின் அங்கத்தவர்களுக்கு கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக செலுத்தப்படும் வருகைப் படியினை அதிகரிப்பதற்காக 2018 யூலை 12ஆந் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுவின் மற்றும் 2018 ஆகஸ்ட் 10ஆந் திகதி இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்துள்ளமை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட கட்டணங்களை மீள அறவிட வேண்டும். |
| (எ) | ஒழுங்குபடுத்தல் பேரவையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் | புதிய பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்கு மற்றும் பழைய | அதிகாரச்சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| மருத்துவ நிறுவனங்களின் பதிவினைக் காட்சிபடுத்தி பெயர்ப்பலகைகளை பொருத்துதல் ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணியொன்றான போதிலும், 2011ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 09 வருட காலப்பகுதியில் தனியார் மருத்துவ நிறுவனங்களில் புதிய பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்கு மற்றும் பழைய பெயர்ப்பலகைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு (Refill) ஒழுங்குபடுத்தல் பேரவையால் ரூபா 14,655,685 செலவிடப்பட்டிருந்தது. | பெயர்ப்பலகைகளை மீள ஒழுங்கமைத்தல் ஒழுங்குபடுத்தல் பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம் இடம்பெறுகின்றமை. | பணிகளுக்காக மாத்திரம் செலவினம் மேற்கொள்ள வேண்டும். |

**3.3 பதவியணி நிர்வாகம்**

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தல் சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் சபைக்குரிய பணிப்பொறுப்பு மற்றும் அதன் அளவு தொடர்பில் அறிந்து அதற்கு பொருத்தமான முறையில் பதவியணியை அங்கீகரிக்கவும் இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | நிறுவனத்தின் பணிப்பொறுப்பினை உரிய முறையில் அறிந்து அதற்குப் பொருத்தமான முறையில் ஆட்சேர்ப்பதற்காக பதிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், பேரவையால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது. | பதவியணியை அங்கீகரிக்கவும், அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று இல்லாதிருந்தமை மற்றும், தற்போது அதனை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.6.1ஆம் வழிகாட்டியின் பிராகரம், ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதி முதல் 6 மாத காலம் கடந்திராத போது, ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான வரையறுக்கப்பட்ட எல்லையொன்றுக்கு மாத்திரம் பொருட்களை மீள கட்டளையிடும் இயலுமை காணப்படுகின்றது. எனினும், அதற்கு முரணாக 2012 யூன் 07ஆந் திகதி கிடைதிருந்த கூறுவிலைகளின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் 08 சந்தர்ப்பங்களில் மீள விலைக்கேள்வி கோரப்படாது அந்த வழங்குநர்களிடமிருந்து மீள கட்டளை பிறப்பிக்கப்பட்டு பல்வேறு அளவுகளிலான 1,268 பெயர்ப பலகைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு ரூபா 1,141,400 செலவிடப்பட்டிருந்தது. | எல்லா பெறுகைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டு, முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கூறுவிலைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதன் பின்னர் வழங்குனர் தெரிவு செய்யப்படுவார். இது தொடர்பான அறிக்கையொன்று பேரவையின் மாதாந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். அவ்வாறே, 2018ஆம் ஆண்டு முதல் வழங்குநர்களை பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டு பேரவையின் அங்கீகாரத்தின் கீழ் விலைக்கேள்வி கோரப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | - மேற்படி - |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24ஆந் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொவிற் 19 காரணமாக | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிகளில் தயாரிக்கப்பட்டு, உரிய திகதியில் |

| | | |
|---|---|---|
| திகதி 01/2004ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், சட்டவாக்க சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 205 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2020 செப்தம்பர் 25ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நடாத்துவதறிகு திட்டமிடப்பட்டிருந்த மாதாந்த கூட்டங்கள் மற்றும் உப கூட்டங்கள் நடாத்தப்படடாமையால், மாதாந்தக் கூட்டத்தின் அங்கீகாரம் கிடைக்காமையால் தாமதமடைந்திருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09ஆந் திகதிய DMA/2009(1), 2016 சனவரி 28ஆந் திகதிய DMA/2009(1)(i) மற்றும் 2019 சனவரி 12ஆந் திகதிய DMA/1-2019 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டுக்கு 1 டிடிபயாக வருடமொன்றுக்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைததுவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஒழுங்குபடுத்தல் பேரவையால் மீளாய்வாண்டின் போது எந்தவொரு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 நவம்பர் 11ஆந் திகதி இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் அங்கீகாரத்துடன், முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்களாக கணக்காய்வு விடங்கள் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை. | முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய கூட்டுடனான குழுவொன்று தாபிக்கப்பட்டு உரிய முறையில் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜி/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் | இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமை. | ஒழுங்குபடுத்தல் பேரவையால் தமது விடயப்பரப்பிற்கு கிழுள்ள பணிகள்ட தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையின் கீழான |

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான "2030 நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பேரவை அறிந்திருக்காத காரணத்தால் தமது வியப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையில் கீழான குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அடைவுகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குறிக்கோள்கள், குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.